# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 30, 2022 Weekly E-paper ● April 30, 2022


**ஆளுநரின் செயல்பாடு கூட்டாட்சிக்கு எதிரானது! உச்சநீதிமன்றம்.**

**புரட்சிக் கவிஞரின் எச்சரிக்கை**

தலையங்கம்

**ஓமந்தூரார் மாளிகை கலைஞரின் கனவு நனவாகுமா?**

சாரதா தேவி

**நுணலும் தன் வாயால் கெடும்!**



# ஜனநாயகத்தில் அச்சாணி ‘முதல்வர்’ ஆளுநர் ‘பொம்மை’ !

பொள்ளாச்சி மா. உமாபதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 30, 2022

Weekly E-paper ● April 30, 2022


# ‘கருஞ்சட்டை விருது’ 2022

## சென்னை 29.4.2022















# ஜனநாயகத்தில் அச்சாணி 'முதல்வர்' ஆளுநர் 'பொம்மை' !

**பொள்ளாச்சி மா. உமாபதி**

தொங்கும் பொம்மைகள் அலங்காரமானவை; ஆனால் அவசியமானவை அல்ல. ஜனநாயகத் தேரில் அச்சு, சக்கரம், அச்சாணியாக – மக்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் விளங்குகின்றனர். இதில் ஆளுநர் என்பவர் அந்தத் தேரின் இயக்கத்திற்கு எந்தவிதத்திலும் பயன்படாத அலங்காரத் தொம்பை. வெள்ளையரின் காலனி ஆதிக்கத்தின் போது அவர்களின் அதிகார மையமாக ஆளுநர் செயல்பட்டார். ஆனால் வெள்ளையர் வெளியேறி மக்கள் ஆட்சி அமைந்த பின்னாலும் ஆளுநர் பதவி தேவையற்றது; எனினும் ஒன்றியத்தை ஆளும்கட்சி தாங்கள் கௌரவிக்க விரும்பும் மூத்தவர்களுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்க இயலாத போது அவர்களை மாநில ஆளுநர்கள் ஆக நியமனம் செய்து வந்தனர்.



தமிழ்நாட்டுக்கு மைசூர் மகாராஜா ஜெய சாமராஜ உடையார் போன்ற பெருமக்களும் பிரபுதாஸ் பட்வாரி போன்ற எளிமை விரும்பிகளும் ஆளுநர்களாக இருந்துள்ளனர் . அதில் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த பெருமை மேதகு உஜ்ஜல் சிங் அவர்களைச் சாரும். 1991இல் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்தவர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா. அம்மையார் ஜெயலலிதா, சு சாமி, சோ சாமி, குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் ஆகிய பார்ப்பனர் கூட்டம் தற்காலிகப் பிரதமராக இருந்த சந்திரசேகர் ஆட்சியில் கலைஞரின் நேர்மையான தூய்மையான ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தனர். அப்போது அவர்களின் சதிக்கு உடன்பட மறுத்ததுடன் ஆளுநர் பதவியைத் துச்சமெனத் தூக்கி எறிந்தவர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா.



வயது முதிர்வு சரியாக நிற்கவும் நடக்கவும் முடியாத ஆளுநர் சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடக்க முயற்சித்தார் என்கின்ற அபாண்ட பழி சுமத்தி அவர் மீது தாக்குதல் தொடுத்தது அதிமுக ஆட்சி.

ஆளுநர் பதவி என்பது "ஆண்டவன் படைத்தான்

என்கிட்ட கொடுத்தான்

அனுபவி ராஜான்னு

அனுப்பி வைத்தான்" என்ற திரைப்படப் பாடல் போன்று ஆளுநர் பதவியை தங்களின் சுகபோக உல்லாச வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது பாஜக ஆர்எஸ்எஸ் பிரமுகர்களின் வாடிக்கை. அந்த வகையில் மேகாலயா ஆளுநராக இருந்த தமிழ்நாட்டின் ஆர்எஸ்எஸ் பேர்வழி சண்முகநாதன் ஆளுநர் மாளிகையை இளம் பெண்களின் உல்லாச கேளிக்கை விடுதியாக மாற்றிய கொடுமை நிகழ்ந்து பின்னர் அவர் துரத்தியடிக்கப்பட்டார்.

தமிழ்நாட்டில் கூட கடந்த அதிமுக ஆட்சியில் ராஜ் பவனையும் அம்மாதிரி உல்லாச கேளிக்கை விடுதியாக மாற்ற சில நிர்மலாதேவிகள் பயன்படுத்தப் பட்டனர் .

ஏழரை கோடி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆகிய 234 சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஒரு மனதாக இயற்றிய தீர்மானங்களை – தமிழ்நாட்டில் தனித்து நின்று ஒற்றைத் தொகுதியில் கூட கட்டுத் தொகையை திரும்பப் பெற முடியாத பாஜகவின் பிரதிநிதி தன் காலடியில் போட்டுத் தூங்கிக் கொண்டிருப்பது எதேச்சதிகாரத்தின் வெளிப்பாடு. அதனால்தான் ஆளுநரை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை இப்போது வலுப்பெற்று வருகிறது. பெரும்பான்மையிலும் பெரும்பான்மையான மாநில மக்களின் ஒட்டுமொத்த உணர்வான நீட் தேர்வு விலக்கு பற்றிய தீர்மானம் ஒருமுறைக்கு இரு முறை ஒருமனதாக நிறைவேற்றிய பின்னாலும் அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் கிடப்பில் போட்டு வைக்கிற ஆளுநரின் அடாவடித்தனம் வன்மையான கண்டனத்திற்கு உரியது. கடந்த அதிமுக ஆட்சியில் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும்போது "தமிழ்நாட்டில் எவருக்கும் அந்த தகுதி இல்லை" என்று வெளிமாநிலங்களில் இருந்து "ஊழல் சூரப்பா"க்களை இறக்குமதி செய்தார். அந்த சூரப்பாக்கள் செய்த ஊழல்கள் இன்றைக்கு அம்பலப்பட்டு வருகின்றன. உலக அளவில் புகழ்பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் ஆகும் தகுதி தமிழ்நாட்டில் எவருக்கும் இல்லை என்று புரோகிதர்கள் முடிவெடுத்தபோது ஆளும் கட்சியாக இருந்த அதிமுக அதனைப் பணிவுடன் ஏற்றுக்கொண்டது. மறுத்துப் பேசவும், எதிர்த்துக் கேள்வி கேட்கவும் வக்கற்ற, வகையற்ற, திறனற்ற, முதுகெலும்பில்லாத ஆட்சியாக அதிமுக ஆட்சி இருந்தது.

ஆனால் இன்றைக்கு 'மானமும் அறிவும்', 'சூடு சொரணை'யும் உள்ள திராவிட ஆட்சி தளபதி முக ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறுவதால் இனிமேல் தமிழ்நாட்டில் துணைவேந்தர்கள் நியமிக்கும் அதிகாரம் தமிழ்நாடு அரசுக்குத்தான் உள்ளது; அந்த அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்கின்ற துணிவுமிக்க தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் ஆளுநர் ரவி துணைவேந்தர்களை அழைத்து தமிழ்நாட்டில் பாஜகவின் புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பற்றி கலந்து ஆலோசிக்கின்றார். தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசும், அதன் முதல்வரும், கல்வித்துறைக்கான ஒரு அமைச்சரும், அமைச்சக்கமும், அந்தத் துறையை நிர்வகிக்கும் செயலாளர்கள் உள்ளிட்ட அலுவலர்களும் இருக்கும்போது இவர்கள் எவரையும் மதிக்காமல் ஆளுநர் துணைவேந்தர்களை அழைத்து மிக முக்கியத்துவம் வாய்ந்த

தொடர்ச்சி அடுத்தப்பக்கம்...

முன்பக்க தொடர்ச்சி...

கல்விக் கொள்கை பற்றி பேசுவது என்பது அக்கிரமம்; அடாவடித்தனம்.

இவர் யார்? எந்த ஊர்? இவருக்கு இந்த மண்ணைப் பற்றி, மக்களைப்பற்றி, மக்களின் உணர்வுகளைப் பற்றி மக்களின் உரிமைகள் பற்றி என்ன தெரியும்? ஒன்றிய அரசின் ஒற்றை நியமனத்தில் ஆளுநராக வருபவர் தமிழக மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்து செயல்படுவது அறிவீனம். ஆளுநரின் வேலையெல்லாம்... மாநில அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றுகின்ற தீர்மானங்களை ஒன்றிய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வது மட்டும்தான். கிட்டத்தட்ட அது ஒரு தபால்காரர் அளவிலான அதிகாரப் பதவி. மாநில அரசு நிறைவேற்றுகின்ற தீர்மானங்களைக் கிடப்பில் போடுவதும், திருப்பி அனுப்புவதும், மாநில அரசின் கருத்துகளுக்கு எதிராக தனிப்பாதை அமைப்பதும் மிகவும் தவறான செயல்களாகும்

> “ஏற்கனவே 1970-71களில் மாநில சுயாட்சி பற்றி நீதியரசர் ராஜமன்னார் கமிஷன் அமைத்து அறிக்கையைப் பெற்று ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தவர் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலுப்படுத்தி அனைத்து மாநில அரசுகளையும் ஒருங்கிணைத்து போராட வேண்டிய காலம் கனிந்து கொண்டு இருக்கிறது.”

ஏற்கனவே 1970-71களில் மாநில சுயாட்சி பற்றி நீதியரசர் ராஜமன்னார் கமிஷன் அமைத்து அறிக்கையைப் பெற்று ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தவர் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலுப்படுத்தி அனைத்து மாநில அரசுகளையும் ஒருங்கிணைத்துப் போராட வேண்டிய காலம் கனிந்து கொண்டு இருக்கிறது. ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## புரட்சிக் கவிஞரின் எச்சரிக்கை

**“எங்கள் பகைவர்**
**எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர்கள்**
**ஒன்றாதல் கண்டே”**

என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

பகைவென்ற தமிழர்களை ஆரியத்தால் வீழ்த்த முடியவில்லை என்றாலும், அப்பகை ஆரிய-திராவிடப் பகையாகத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அரசியல் முகமுடியான பா.ஜ.க.வின் ஆட்சி ராமராஜ்யம் என்ற பெயரில் ஒரு பார்ப்பனிய, மனுவின் ஆட்சியமைக்க முயன்று கொண்டு இருக்கிறது. அதற்காக ராமன், கிருஷ்ணன், அனுமன் என்ற போர்வையில் இந்துமத வெறியை வளர்த்துக் கொண்டு இருக்கிறது. இதே போர்வையில் தாழ்த்தப்பட்ட , சிறுபான்மையின மக்களுக்கு எதிரான செயல்களை முன்னெடுக்கிறது என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மாட்டுணவு, அணியும் ஆடை, மத அடையாளங்கள் உள்ளிட்டவைகளை முன்னிறுத்திக் கலவரங்களை உருவாக்குவதும், தாக்குதல்களை நடத்துவதும் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன.

இவையெல்லாம் வட மாநிலங்களில்தான் நடந்துள்ளன, தமிழ்நாட்டுக்குள் இதுவரை நுழையவில்லை. காரணம் தந்தை பெரியாரும், திராவிட இயக்கமும்தான்.

தந்தை பெரியாரையும், திராவிடச் சித்தாந்தத்தையும் தமிழ்நாட்டில் இருக்கும் பார்ப்பனர் அல்லாத இந்துக்களில் பெரும் பகுதியினர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது “இந்துத்துவா”வைத் தடுத்து நிறுத்துவதில் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தி, தமிழக விவசாயிகள், தமிழக மீனவர்கள், இடஒதுக்கீடு, நுழைவுத் தேர்வு என்று பல்வேறு நிலைகளில் தமிழகத்தைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசை நோக்கி மாநில சுயாட்சி என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி விட்டது.

முதல்வர் ஸ்டாலின் கரங்களில் “திராவிட மாடல்” ஆட்சியின் செங்கோல் வலிமையாக இருக்கிறது.

புரட்சிக் கவிஞர் எச்சரிக்கிறார்

**“பொங்கு தமிழர்க்கு**
**இன்னல் விளைத்தால்**
**சங்காரம் நிசமென்று**
**சங்கே முழங்கு !”**

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**
**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**
மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**
டுவிட்டர்: **suba_vee**
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# ஓமந்தூரார் மாளிகை - கலைஞரின் கனவு நனவாகுமா?

**சாரதாதேவி**



கடந்த ஏப்ரல் 26 அன்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் பிறந்தநாளில் ஓமந்தூரார் மாளிகையில் அவருக்கு சிலை நிறுவப்படும் என அறிவித்துள்ளார்.

கலைஞரின் கனவுத் திட்டமான பன்னாட்டுத் தொழில்நுட்பத்துடன் திராவிடக் கட்டிடக் கலையையும் இணைத்து, இயற்கையை வரவேற்று, பல சூழலியல் நுணுக்கங்களுடன் நிறைவேற்றப்பட்ட ஓமந்தூரார் மாளிகை புதிய சட்டமன்றத் திட்டம் கொடியவர்களின் ஆட்சியில் முடக்கப்பட்டது. ஓராண்டுக் காலம் சட்டமன்றமாக இருந்த அந்த மாபெரும் கட்டிடம் அன்றைய முதல்வர் ஜெயலலிதாவால் மருத்துவமனையானது. கலைஞரின் பெயரை அழித்துவிடும் நோக்கில் அவர்கள் எடுத்த முயற்சி பல திராவிட நெஞ்சங்களில் உதிரப் பெருக்கை வரவழைத்தது. காலம் மருந்திடும் வேளை வந்தது போல தளபதியின் அறிவிப்பு வந்திருக்கிறது.

இந்திய சுதந்திரத்திற்கு முன்பிருந்தே புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றம் செயல்பட்டு வந்தது. பல்வேறு நிர்வாக அலுவலகங்கள் வெவ்வேறு இடங்களை வாடகைக்கு எடுத்துச் செயல்படுகின்றன. கோட்டை வளாகம் நூற்றாண்டு கண்ட கட்டிடம் மட்டுமல்லாமல், ஒன்றிய அரசின் வளாகமாகவும் இந்தியத் துணை இராணுவக் கேந்திரமாகவும் இருப்பதும் தமிழ்நாட்டு நிர்வாகத்திற்கு பெரும் சிக்கலாக இருந்து வந்தது. 1982 முதல் மாற்று வளாகத்தைத் தேடி வந்தோம். இறுதியாக கலைஞர் அவர்கள் 2008இல் ஓமந்தூரார் தோட்டத்தைத் தேர்வு செய்தார்.

சற்றொப்ப 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த அந்த வளாகம் தலைமைச் செயலகம், சட்டமன்றம், மற்றும் நிர்வாக அலுவலகங்களை உள்ளடக்கியதாகத் திட்டமிடப்பட்டது. ரூ.450 கோடி மதிப்பில் உயர்ந்த ஜெர்மானிய தொழில் நுட்ப வசதியுடன் இயற்கைக் காற்றோட்ட வெளிச்ச வசதிகளை உள்ளடக்கி, 20%- 30% மின்சாரச் சேமிப்பை உறுதி செய்யும் தொழில்நுட்பத்தால் கட்டப்பட்ட ஆசியாவின் அழகிய ஓங்குதாங்கான கட்டிடம் அது. 2010ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கால் திறந்து வைக்கப்பட்டு ஒரு ஆண்டுக் காலம் செயல்பட்டது.

அந்த வளாகத்தின் பிரமிப்புக்குக் கலைஞரின் பெயர் வந்துவிடக் கூடாதென எண்ணிய சிறுமதியோர், அடுத்து 2ஜி எனும் மாபெரும் சதி வழக்கால் 2011இல் நடந்த ஆட்சி மாற்றத்தைப் பயன்படுத்தி அதை மருத்துவமனையாக மாற்றினர். சட்டமன்ற வளாகக் கல்வெட்டையும் அப்புறப்படுத்தி தங்கள் பெயரைப் போட்டுக் கொண்டனர். கேட்பாரற்ற அராஜகம். அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது என அப்போது நீதிமன்றமும் கைவிரித்தது.

அவ்வளவு அநீதிகளையும் கணக்கிலெடுத்தது போலவும், உதிரம் வடியும் இதயங்களுக்கு மருந்திடுவது போலவும் ஆட்சி அமைத்த பின் கடந்த செப்டம்பர் மாதமே சட்டமன்ற வளாகத் திறப்பு கல்வெட்டை மீண்டும் நிறுவியது தி.மு.க. அரசு. தற்போது அங்கு கலைஞரின் சிலை நிறுவப்படும் என அறிவித்திருக்கிறார் முதல்வர்.! காத்திருப்போம் மேலும் நற்செய்திக்காக! ●

## ஆளுநரின் செயல்பாடு கூட்டாட்சிக்கு எதிரானது ! - உச்சநீதிமன்றம்

பேரறிவாளன் ஒரு சிறிய பேட்டரியை வாங்கினார். முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மரணத்திற்குக் காரணமான குண்டு வெடிப்பு இந்த பேட்டரி மூலம் நிகழ்த்தப்பட்டது என்று கைது செய்யப்பட்டு, முப்பது ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட அவரின் மனு மீதான வழக்கு 27-4-2022 அன்று உச்ச நீதிமன்றத்தில் வந்தது.

மாநில அரசு விடுதலைக்கான தீர்மானம் இயற்றிய பின்னரும் ஏன் விடுதலை செய்யவில்லை?



பேரறிவாளனை விடுவிக்க மத்திய அரசுக்கா அல்லது ஆளுநருக்கா, யாருக்கு அதிகாரம் என்ற குழப்பத்தில் அவரைத் தொடர்ந்து சிறையில் வைக்கலாமா?

பேரறிவாளன் விவகாரத்தில் ஒவ்வொரு முறையும் ஆளுநரின் பதில் முரண்பாடாகவே இருக்கிறது. ஆளுநர் உத்தரவுக்காக வழக்கை எத்தனை முறை ஒத்திவைப்பது?

மாநில அமைச்சரவை முடிவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட்டால் அது கூட்டாட்சிக்கு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். மாநில அமைச்சரவையின் முடிவுகள் ( தீர்மானங்கள் ) ஆளுநருக்குத் திருப்தி தரவில்லையானால் அதைக் குடியரசுத் தலைவருக்கு அவர் அனுப்புவாரா?

யார் விடுவிப்பது என்ற நிலை நீடித்தால், பேரறிவாளனை நீதிமன்றமே விடுவிப்பதுதான் தீர்வாக இருக்கும் என்று சொல்லி வழக்கை ஒத்தி வைத்தது உச்ச நீதிமன்றம். இது தமிழ்நாடு ஆளுநருக்கு அறிவுரையன்று, எச்சரிக்கை.

இனி பேரறிவாளனின் விடுதலை வெகுதூரத்தில் இல்லை எனலாம்.

## நுணலும் தன் வாயால் கெடும்!



தமிழகம், ஆந்திரம், மேற்கு வங்கம், மேகாலயா, ஜார்கண்ட், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்கள் பெட்ரோல், டீசல் மீதான 'வாட்' வரியைக் குறைக்காமல் அடம்பிடிப்பதால் மக்களுக்கு அதிக சுமை ஏற்படுகிறது என்று மோடி பேசியிருக்கிறார்.

உடனே நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் பெட்ரோல், டீசல், சமையல் எரிபொருளின் மீதான கலால் வரிகளை முதலில் ஒன்றிய அரசு குறைக்க வேண்டும் என்று பதிலடி கொடுத்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும் வருவாயில் கையை வைக்கும் மோடி அரசு மாநிலங்களைக் குறை சொல்லி, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்து நாடகமாடுகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள் என்று சூடாகப் பதில் சொல்லியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

பா.ஜ.க. அல்லாத மாநிலங்களைக் குறை சொல்லிக் கொண்டிருக்கும் மோடி, கொரோனா பரவல் தடுப்பு குறித்த முதல்வர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் இப்படிப் பேச வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வி எழுப்புகிறார் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.

நுணலும் தன் வாயால் கெடும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian